*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்
## பாடம் 18 பரிசுத்த ஆவியானவர்

## உங்கள் போராட்டங்களுக்கு பதில் எங்கே தேடுகின்றீர்கள்?
## *Looking for an answer in your life?*

***கலாத்தியர் 3:1-3, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2. ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?***

*தேவ ஆவியானவர் அவரை விசுவாசிப்பவர்களுக்கு வரங்களை கொடுக்கிறார். சரீரமாகிய சபையை கட்டி எழுப்ப விசுவாசிகள் மூலமாய் வெளிப்படையாக அந்த வரங்கள் மூலம் கிரியைகள் செய்கிறார்சபையின் வாழ்க்கை மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய அதில் பரிசுத்த ஆவியானவர் ஒரு முக்கிய மைய புள்ளி ஆவார்.*

*கிறிஸ்துவில் நம்முடைய வாழ்க்கை பரிசுத்த*

*சிலநேரங்களில் சங்கீதத்தின் முடிவில் நீங்கள் ஒரு வழியை காண முடியும், சில நேரங்களில் இல்லை. ஆனால் அவர் எப்போதும் ஆண்டவரிடம் செல்வார் ஆண்டவரின் இறையாண்மை மற்றும் மனிதர்களின் ஒழுக்கக்கேடு அவருக்கு தெரியும். அவருக்கு தன்னுடைய பிரச்சனைக்காக யாரிடம் செல்ல வேண்டும் என்று தெரியும்.*

***எரேமியா 17:9, எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?***

*இது நம்மெல்லோருக்கும் நன்கு தெரிந்த வசனம், இதில் உள்ள முக்கிய கொள்கையை கவனியுங்கள் இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.*

*உங்களுக்கும் எனக்கும் ஏமாற்றும், மற்றும் நேர்மையற்ற இருதயம் உள்ளது.*

***அவர் இருதயம் என்று சொல்வதன் அர்த்தம் என்ன?***

*அவர் சிந்தனை மற்றும் மனசை குறிப்பிடுகிறார். அவர் 10ம் வசனத்திலிருந்து இருதயம் மற்றும் சிந்தனையை குறிப்பிடுகிறார்.*

- ✓ *உங்களில் இருக்கும் சிந்திக்கும் திறன்,*
- ✓ *உங்களில் இருக்கும் ஆய்வு திறன்,*
- ✓ *உங்களில் இருக்கும் மதிப்பீடு திறன் மற்றும்*
- ✓ *உங்கள் சிந்தனை.*

*தேவன் எரேமியா மூலம் சொல்லுகிறார் இருதயமே எல்லாவற்றிலும் மகா கேடுள்ளது என்று.*

*உங்களிடம் யாராவது வந்து, "நீங்கள் செய்யவேண்டியது உங்களுக்குள் ஆராய்ந்து பார்த்து மற்றும்*

*உங்களுக்குள்ளிருக்கும் நபரோடு தொடர்பு வைத்து கொள்ளுங்கள்" என்று சொன்னால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?*
*அதிலிருப்பதை நான் நம்புவதில்லை, அது எனக்கு சரியான பதிலை கொடுப்பது இல்லை.*

*என் இருதயம் எல்லாவற்றிலும் கேடுள்ளது.*
*நான் போய் பார்க்கும் இதயமானது ஒரு மகா கேடுள்ளது.*

***காரணம்:*** *நான் வக்கிரமானவன், நான் இரட்சிக்கப்பட்டு இருந்தாலும் எனக்குள் வக்கிரமுள்ள எண்ணம் உள்ளது. எனக்குள் பாவம் தொடர்ந்து உள்ளது. எனக்குள் இருக்கும் பாவம் என் இச்சைக்கு ஏற்றாற்போல் மற்றும் தேவனுக்கு எதிராக செயல்படுகிறது.*

*அது தொடர்ந்து என்னை பற்றி,*

- ✓ *நான் யார் என்றும்*
- ✓ *நான் என்னை விட சிறந்தவன் என்றும்,*
- ✓ *நான் செய்வதற்கு நான் பொறுப்பு அல்ல*

*என்றும் தொடர்ந்து பொய்களை கூறுகிறது.*

*அது என்னை வஞ்சிக்கிறது. இதயம் எல்லாவற்றிலும் கேடுள்ளது மற்றும் அது மிகவும் பலவீனமானது.*

***அதை யார் புரிந்து கொள்ள முடியும்?***
*யாரும் முடியாது!*

***1 கொரிந்தியர் 4:4, என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.***

*பவுல் சொல்லுகிறார்,நான் என்னை உற்று பார்க்கும் போது எனக்கு எதிராக ஒரு குற்றத்தையும் காணவில்லை என்கிறார்.என் மனசாட்சி நன்றாக உள்ளது அது என்னை குற்றப்படுத்தவில்லை.*

***ஏன்?***

*ஏனென்றால் எனக்கு பொய்யை கூறும் இருதயம் உள்ளது அதை நான் நம்ப முடியாது.*

***நீதிமொழிகள் 16:2, "மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்."***

***நீங்கள் அப்படி உணர்ந்து இருக்கிறீர்களா?***

*ஆனால் தேவனுக்கு என்னுடைய நோக்கம் தெரியும்.*

*உங்கள் இருதயம் கேடுள்ளது, வக்கிரமுள்ளது அதை நீங்கள் நம்ப முடியாது.*

***நீதிமொழிகள் 14:12, மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.***

*நீங்கள் உங்கள் இருதயத்தை நம்ப முடியாது.*

*எனவே இந்த மக்கள் உங்களிடம் நீங்கள் இருதயத்தின் ஆழத்தை நோக்கி செல்ல வேண்டும் விடையாக என்று கூறும்போது, நமக்கு தெரியும் நாம் தவறான விடைகளையே பெறுவோம் ஏனென்றால் நம்முடைய உள்ளே இருதயம் கேடுள்ளது.*

***எரேமியா 17:10, கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.***

*தேவன் இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாய் இருக்கிறார்.*

*தேவன் அவனுக்கு அவனை பற்றிய உண்மையை கூறி அவனுக்கு அதற்கான முடிவுகளை கூறுகிறார்.*

*நீங்கள் உங்களை நம்ப முடியாது, தேவனை தான் நம்ப முடியும்!*

*நீங்கள் தேவனிடம் தான் செல்ல வேண்டும். எனவே தான் நாம் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து வாழ வேண்டும் நம்மை அல்ல.*

***சிகிச்சை:***
*உங்கள் இருதயத்திலிருந்து உங்களாலையே உண்மையை வெளிக்கொண்டு வரமுடியாது என்றால் ஏதோ ஒரு சிகிச்சை நிபுணர் எப்படி வெளிக்கொண்டு வரமுடியும்?*

*நீங்கள் நாள் முழுவதும் உங்களை ஏமாற்றி கொள்ள முடியும் மற்றவர்களையும் ஏமற்ற முடியும்!*
*நீங்கள் காரணமே இல்லாமல் அழ முடியும்,*
*நீங்கள் காரணமே இல்லாமல் சிரிக்க முடியும்.*
*நீங்கள் செய்யாத ஒன்றை ஒப்புக்கொள்ள முடியும்,*
*நீங்கள் செய்ததை ஒப்புக்கொள்ள முடியாமலும் இருக்க முடியும்.*

***சங்கீதம் 7:9, துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப் பண்ணும்; நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக; நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங் களையும் சோதித்தறிகிறவர்.***

*நீதியுள்ள தேவன் இருதயம் மற்றும் சிந்தனை சோதித்து பார்க்கிறார்.*

*தேவனால் மட்டுமே*

- ✓ *சோதிக்க,*
- ✓ *மதிப்பீடு செய்ய முடியும் மற்றும்*
- ✓ *உண்மை தெரியும்.*

***சங்கீதம் 26:2, கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும்.***

*தாவீது மனித ஆலோசகரிடம் போக விரும்பவில்லை.*
*இது ஒரு போராட்ட ஜெபம். இது உடைந்த மற்றும் மனம் மாற்றத்தின் ஜெபம்.*

***சங்கீதம் 139:1-12, கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். 2. என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். 3. நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். 4. என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். 5. முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். 6. இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. 7. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? 8. நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். 9. நான் விடியற்காலத்துச்***

***செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், 10. அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். 11. இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். 12. உமக்கு மறைவாக இருளும் அந்த காரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்ச மாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.***

*உங்களை போலவே உள்ளவரிடம் நீங்கள் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினால், யாரிடம் தொடர்பு வைத்துக்கொள்வீர்கள்?*
*உங்களிடமா?*
*சிகிச்சை நிபுணரிடமா?*
*அல்லது வேற யாருடனா?*
*பரிசுத்த ஆவியானவரிடம் மட்டுமே வைத்துக்கொள்ளுங்கள்!*

***சங்கீதம் 32:6-9, இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. 7. நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா.) 8. நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். 9. வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.***

*இது மிகவும் நடைமுறைக்கேற்றது!*

*வெள்ளம் வருவதை கண்டு, அதில் மூழ்கி, மிகவும் ஆபத்தில் உள்ளவரின் உருவகம் இது.*

*இப்பொழு தாவீது என்ன சொல்லுகிறார்?*
*தேவன் என்ன செய்வார்?*
*தேவனை கண்டு அடையும் சமயத்தில் அவரை தேடுங்கள்!*

***நீங்கள் யாரிடம் செல்ல வேண்டும்?***
*தேவனிடம் செல்லுங்கள்.*

***உங்களுக்கு ஆலோசகர் வேண்டுமா?***
*யார் அருமையான ஆலோசகர்?*
**தேவன் மட்டுமே.**

***வ 8," உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்."***

***நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டுமா?***
*தேவன்*

- ✓ *நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் காண்கிறார்,*
- ✓ *நீங்கள் பேசும் எல்லாவற்றையும் கேட்கிறார்,*
- ✓ *நீங்கள் யோசிக்கும் அனைத்தும் அறிவார்.*

*அது தான் கணக்கு கொடுப்பது.*

***உங்கள் ஆலோசகர் யார்?***
*தேவன் தான் உங்கள் ஆலோசகர்.*

***1 கொரிந்தியர் 2:12-13, 12. நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் .13. அவைகளை நாங்கள்***

***மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக்காண்பிக்கிறோம்.***

*தேவனிடம் உள்ள ஆவிக்குரிய காரியங்களை அறிய வேண்டும் என்றால் ஆவியானவரிடம் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள் அவர்தான் அவைகளை வெளிப்படுத்துவார்.*

*வ 13 சொல்லுகிறது ஆவியானவராலே என்று.*

*எனவே எனக்கு எப்போதெல்லாம் முடிவுகள், பதில்கள், ஆலோசனை, ஞானம் மற்றும் என்னை பற்றிய உண்மை வேண்டுமானால் நான் பரிசுத்த ஆவியானவரிடமே செல்வேன். அவர் தான் எல்லாவற்றிற்கும் மூலக்கூறு!*

***யோபு 12:13-17, அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத்தான் ஆலோசனையும் புத்தியும் உண்டு. 14. இதோ, அவர் இடித்தால் கட்டமுடியாது; அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்க முடியாது. 15. இதோ, அவர் தண்ணீர்களை அடக்கினால் எல்லாம் உலர்ந்துபோம்; அவர் அவைகளை வரவிட்டால், பூமியைக் கீழதுமேலதாக்கும். 16. அவரிடத்தில் பெலனும் ஞானமுமுண்டு; மோசம்போகிறவனும் மோசம்போக்கு கிறவனும், அவர் கையின் கீழிருக்கிறார்கள். 17. அவர் ஆலோசனைக்காரரைச் சிறைபிடித்து, நியாயாதிபதிகளை மதிமயக்குகிறார்.***

*ஜெபம் என்கிற பெயரில் நாம் ஏன் ஒரு மனிதனின் கருத்துக்களை முன்வைக்கிறோம்?*

***வ 20, அவர் நம்பிக்கையுள்ளவர்களுடைய வாக்கை விலக்கி, முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப் போடுகிறார்.***

*நீங்கள் ஆண்டவரிடம் உண்மையாகவே திரும்பினால் அவர்களின் பேச்சை நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டிர்கள். தேவன் முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப்போடுகிறார்.*

***வ 24, அவர் பூமியிலுள்ள ஜனத்தினுடைய அதிபதிகளின் நெஞ்சை அகற்றிப்போட்டு, அவர்களை வழியில்லாத அந்தரத்திலே அலையப்பண்ணுகிறார்.***

*தேவன் அவர்களை ஒரு குடிகாரர் போல அலைய செய்கிறார். அவர் தேவனை ஒரு மனித ஆலோசகராக, மனித ராஜாவாக மற்றும் ஒரு மனிதன் போலவே ஒப்பீடு செய்கிறார்.*

***நீங்கள் எங்கே திரும்பப்போகிறீர்கள்?***
*தேவனிடம் திரும்புங்கள்.*

*இன்றைய சபைகளில் உள்ள மிக பெரிய சோகம் என்னவென்றால் அது பாவம் மற்றும் குறைகளால் நிறைந்து இருக்கிறது.*

- ✓ *தனிப்பட்ட பிரச்சனைகள்,*
- ✓ *குடும்ப பிரச்சனைகள்,*
- ✓ *ஒன்றுபட்ட சபையின் பிரச்சனைகள் மற்றும்*
- ✓ *நீங்கள் சந்திக்க கூடிய எல்லா பிரச்சனைகளும்*

*இந்த எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு தேவனின் ஆலோசனையில் தான் உள்ளது. தேவன் நம்முடைய*

விசுவாசமுள்ள ஜெபத்தால் தேவ ஆவியானவரால் நமக்கு உதவி செய்கிறார்.